மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண்கள் 240 மற்றும் 241 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 242, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

242—

தொழிற்பேட்டை

***19839—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும்கூட, தேவையான அரசு புறம்போக்கு நிலம் இருக்குமேயானால், தொழில் முனைவோர்கள் முன்வந்தால், பூம்புகார் தொகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கு

2013 ஏப்ரல் 17]

சிட்கோ நிறுவனம் அரசின் மூலமாக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.

திரு. சு. பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்று ஆட்சி புரிகிற அன்ன லட்சுமி, காவேரியின் உரிமையை மீட்டெடுத்த பொன்னியின் செல்வி, அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது பூம்புகார் தொகுதி விவசாயக் கூலித் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. இந்தப் பகுதியிலே ஒரு தொழிற்பேட்டை அமைத்தால், படித்த மாணவர்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்க ஏதுவாக இருக்கும். எனவே மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சென்று, இத்தொகுதிக்குத் தொழிற்பேட்டை கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், நாகப்பட்டினம் வட்டம், வடக்கு பால்பண்ணைச்சேரி என்ற இடத்தில் ஏற்கெனவே சிட்கோ மூலமாக தொழிற்பேட்டை இயங்கி வருகிறது. அதிலே 24 தொழில் மனைகள் இப்பொழுது காலியாகவே உள்ளன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற பூம்புகாருக்கும், நாகப்பட்டினத்திற்கும் இடையே 50 கிலோ மீட்டர் இடைவெளி உள்ளது. அதேபோன்று, நாகப்பட்டினம் மாவட்டம், மாயவரம் வட்டத்தைச் சார்ந்த குளிச்சார் என்ற இடத்தில், மயிலாடுதுறை சிட்கோ தொழிற்பேட்டை உள்ளது. பூம்புகாருக்கும் இதற்கும் இடையே 20 கிலோ மீட்டர்தான் இடைவெளி இருக்கின்றது. இந்தத் தொழிற்பேட்டையிலும் 16 மனைகள் காலியாகவே உள்ளன. எனவே, உறுப்பினர் அவர்கள் வேண்டுமேயானால் அந்தப் பகுதியிலே காலியாக இருக்கக்கூடிய

மனைகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இருந்தாலும்கூட, உறுப்பினர் அவர்கள் விருப்பம் தெரிவிப்பாரேயானால், பூம்புகார் பகுதியிலே அரசு நிலம் இருக்குமேயானால், நிச்சயமாக உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே அரசுப் புறம்போக்கு நிலம் இருக்கிறது. எனவே, அந்த இடத்தைக் கையகப்படுத்தி, அதிலே தொழிற்பேட்டையைத் துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டை அமைக்க நிலம் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய காரணத்தால், அரசு அலுவலர்களைத் தொடர்பு கொண்டு, நான் சார்ந்திருக்கிற ஊரகத் தொழில் துறையின் அலுவலர்களை அங்கே அனுப்பி, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அதற்குண்டான பிரேரணைகளெல்லாம் பெறப்பட்டு, உறுப்பினர் அவர்களின் பூம்புகார் பகுதியில் அரசுப் புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அம்மா அவர்களின் அரசால் அந்தப் பணிகள் கண்டிப்பாக நிறைவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 243, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*